**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.70/2024 நாள்- 09.07.2025

**வா.சா.2-காளிராஜ்**

**வா.சா.2-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

எனக்கு இந்த வழக்கில் சாட்சிய ம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை . வாதி தங்கராஜ் என்னை சாட்சியம் அளிக்க அழைத்துவரவில்லை. வாதியின் வழக்கறிஞர் சொல்லி தான் இந்த வழக்கு பற்றி தெரியும். வாதி எனக்கு மாமா முறை வேண்டும். என்னுடைய நிருபணவாக்குமூலத்திற்கு விவரங்களை தங்கராஜ் தான் கூறினார். வாதி தங்கராஜ் வட்டி கொடுக்கும் தொழில் செய்துவருகிறார் என்றால் இல்லை. பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்ற விவரமும், அடமான ஆவணம் எழுதிய விவரமும் எனக்கு நேரடியாக தெரியும். பிரதிவாதி 2021ல் அடமானக்கடன் பெற்றுள்ளார். 2021ம் ஆண்டுக்கு முன்பாகவே பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்ற விவரமும், வட்டி செலுத்த வில்லை என்ற விவரமும் எனக்கு தெரியும். ஏற்கனவே வாங்கி கடனுக்கு வட்டி செலுத்தாமல் இருந்த நிலையில் புதியதாக கடன் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. இரண்டாவது கடன் ரூ.50,000/- கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியும். வாதி வட்டி கொடுக்கும் தொழில் செய்து வருவதால் பிரிதிவாதி சிறுகசிறுக ரூ.50,000/- கடன் பெற்றிருந்தார் அதற்கு வாதி மும்மடங்கு தொகை போட்டு ரூ.1,50,000/-த்திற்கு அடமான ஆவணம் எழுதிக்கொண்டார் என்றால் மும்மடங்கு தொகை போட்டு எழுதிய விவரம் எனக்கு தெரியாது ஆனால் ரூ.50,000/- கொடுத்த விவரம் எனக்கு தெரியும். ஏற்கனவே பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுத்த அடமான ஆவணத்தில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை பார்த்து இந்த வழக்கில் கடன் ஒப்பந்தம் பத்திரம் ஏற்படுத்ததப்பட்டது என்றும், அதில் தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. வா.சாஆ.3 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. ரூ.50,000/- கடன் ஒரு கடன்உறுதிசீட்டில் எழுதிக் கொடுக்கப்பட்டது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், பிரதிவாதி வாதியிடம் இருந்து எந்தக் கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு மாமா முறை வேண்டும் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>சார்பு நீதிபதி,<br>இராஜபாளையம். |